RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2116

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

# பொருளல்லாற் பொருளும் உண்டோ? - வாழ்வின் தேவை உணர்த்தும் பாலைக்கலி

## உஷாராணி ம [அ,*], சுதா மு [அ]

[அ] தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி- 630003, தமிழ்நாடு, இந்தியா.

# Necessities of Life from Palaikali

## Usharani M [a,*], Sutha M [a]

[a] Department of Tamil, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India.

Corresponding Author: musharani200574@gmail.com

Received : 14-05-2020
Accepted : 18-10-2020

**ABSTRACT**

we couldn't not find any news that were not told in Tamil literature two thousand years ago. The species formed in the world are uncountable among them who has the thinking power and the knowledge of how to lead a life is only human race. To enrich the race of human wealth has become a necessity. In whole Sangam literature so many imprints are there about the need of money. esspecially in Kalithogai which is honor by the educated men there is a part called Palaikali. Many pieces of writings are there about wealth in this Palaikali. Befitting the words of Thiruvalluvar as this world is not for the man without money in the importance of wealth had been registered in a beautiful manner that too in many places in this Palaikali. whether it is family life or life of an ascetic money is important without wealth one cannot perform ones duty perfectly in family life where men and women lead their life more meaningfully money has become a must to perform their duties more meaningfully both inside the house and outside in this world this idea registered so firmly in this Palaikali. The same has become the aim of this article too.

**Keywords:** Palaikali, Tamil literature, Comparative Studies, Sangam literature

## ஆசிரியர் குறிப்பு



**திருமதி ம. உஷாராணி**, இவர் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மு.சுதா அவர்களிடம் ஆய்வு மாணவியாக உள்ளார். இவரது ஆய்வுத் தலைப்பு சமூக நோக்கில் பழந்தமிழர்களின் வாழ்வியல் (வறுமையும் வளமையும்) என்பதாகும். சங்க இலக்கியத்தின் மீது ஆர்வமுடையவர். பல்வேறு பல்கலைக்கழகங்களில் வெளியான ஆய்விதழில் பத்திற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சிலப்பதிகாரம், பெரியபுராணம் ஆகியவற்றில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இவர் தற்போது அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வருகிறார். பள்ளி மாணவர்களிடம் சங்க இலக்கிய

ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் தமிழைப் பிழையின்றி எழுதவும் வாசிக்கவும் பயிற்சியளிப்பதில் ஈடுபாடு காட்டி வருகிறார்.



முனைவர் மு.சுதா அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் உதவிப்பேராசிரியர். இதுகாறும் எழுதப்பட்ட கருத்தரங்க ஆய்வுக்கட்டுரைகள் 130 இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியீடு16. வழிகாட்டுதல் முனைவர்- பட்டம் நிறைவு-10, ஆய்வியல் நிறைஞர்-60 பெற்ற விருதுகள் அழகப்பா பல்கலைக்கழக சிறந்த ஆய்வாளர் விருது, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் டாக்டர் இராதா கிருஷ்ணன் விருதை பெற்றுள்ளார்.

## முன்னுரை

'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' எனக்கூறும் தொடர் கலித்தொகையின் பொருட் சிறப்பையும் புலமைச் செறிவையும் காட்டுவதாய் அமைந்துள்ளது. துள்ளல் ஓசையுடைய கலிப்பா வகையில் ஐவகை நிலத்துக்கும், புலவருட் சிறந்த கவிவல்லவர்கள் ஐவர் பாடிய பாடற் தொகுப்பு கலித்தொகை. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. பாலைக் கலியைப் பாடியவர் பாலைபாடிய 'பெருங்கடுங்கோ' பாலைக்கலியில் 35 பாடல்கள் அமைந்துள்ளன. அத்தனையும் அவரவர் இல்லத்தில் நிகழும் நிகழ்வாகவே படைக்கப்பட்டிருப்பது சிறப்பு. பாலை நிலத்தின் கொடுமையிலும் அன்பினை இழையோடச் செய்துள்ளமை சிறப்பானதாகும். இல்லறக்கடமையில் எண்ணுதலும், தலைவி பிரிவுத்துயர் தாங்காது வருந்துதலும், தோழி தலைவனிடம் பிரிவைத்தவிர்க்கப் போராடுவதும், பிரிந்து சென்றவன் வரும் வரை தோழி தலைவியைத் தேற்றுவிப்பதும், தலைவனின் வரவைக் கூறித் தலைவியை மகிழ்விப்பதும் பாலைக்கலியில் கையாளப்பட்டிருக்கும் பொருண்மைகள் எனலாம்.

## பாலைநிலம்

பண்டைய தமிழர் தாம் வாழ்ந்த நிலங்களை ஐவகையாகப் பிரித்து வாழ்ந்தனர். பாலை என்பது தனி நிலம் அன்று. "**முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும்-சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம் காதை**11 (64-66)" என்ற இளங்கோவடிகளின் கூற்றுப்படி காடும் மலையும் வறண்டுவிட்ட பகுதியே பாலை நிலமாகும். தமிழகத்தில் தனிப்பாலைநிலம் கிடையாது (Pillai Ka. Su, 2012 and Vengadasami Nattar, 2008). **"முப்பத்தைந்து பாலைக்கலிப்பாடல்களில் குறிஞ்சி பாலையாதலைப் பற்றிக் கூறுவன ஒன்பது பாடல்கள். முல்லை பாலையாதலைப்பற்றிக் கூறுவன ஆறு பாடல்கள்"** (**Arumukam Na., 1985**).

## பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

சங்கப்பாடல்களில் அகப்பாடல்கள் ஐவகைத் திணைப்பாகுபாடுகளுக்குள் அடங்குபவை. ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு உரிப்பொருள் உண்டு. பாலைத் திணைக்கு '**பிரிதலும்**

**பிரிதல் நிமித்தமும்**' என்பது உரிப்பொருள். தொல்காப்பியர் பிரிவைப் பலவகையில்காட்டுவார்.

**"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (தொல் அகத். 27)**

**"இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே" (தொல்.அகத்.30)**

எனப் பிரிவு பற்றிக்கூறுமிடத்து பொருள்வயின் பிரிவு பற்றித் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இல்லறக்கடமையில் பொருள்வயின் பிரிதல் என்பது ஒரு ஆண்மகனின் ஆண்மைசிறக்கும் நிகழ்வாகும். தன் குடும்பம் எத்துணை செல்வவளம் மிக்கதெனினும் தான் பொருளீட்டித் தன்னில்லறம் சிறக்கப் பாடுபடுபவனே சிறந்த ஆண்மகனாகக் கருதப்படுவான். எனவே உயிரனைய தன் காதலியாகிய மனைவியைப் பிரிந்துப் பொருளீட்ட முனைகிறான் தலைவன். அவ்வகையில் பாலையின் உரிப்பொருளே இப்பாடல்கள் அனைத்திலும் அடியிழையாய் ஓடுவதை அறியமுடிகின்றது.

## பொருளெனும் பொய்யா விளக்கம்

'பொருள்' என்பதற்குப் பலபொருள் இருப்பினும் இங்கு வளத்தை வளர்க்க உதவும் அடிப்படையைக் குறிக்கிறது. அதாவது வாழ்க்கை வளம்பெறத் தேவையான செல்வத்தைக் குறிப்பதாக அமைகிறது. இதையே வள்ளுவர் "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்" எனப் பொருளின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார்.

அகவாழ்வில் அன்பால் திளைக்கும் கணவன் மனைவியர் வாழ்வு சிறக்கவும், இல்லறக்கடமையைத் தடையின்றிச் செய்யவும் பொருள் தேவை. அதை இருந்த இடத்திலேயே அடைதல் எல்லாருக்கும் இயலாது. எனவே, பொருள் தேடுவதற்கு ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு செல்வது அவசியமாகிறது. அவ்வகையில் தலைவன், தன் மனைவியுடன் இணைந்து இல்லற வாழ்வு சிறக்கத் தேவையான பொருளை ஈட்ட எண்ணுவதும், பிரிந்து செல்வதும், பொருளுடன் மீண்டு வருவதும் சங்கப்பாடல்களில் பெரும்பான்மையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**'செறுநர் செருக்கறுக்கும் எஃகு"** எனப் பொருளின் வலிமையை ஒரு கூரிய ஆயுதத்துடன் ஒப்பிடுகிறார் வள்ளுவப் பெருந்தகை. பொருளில்லாதவன் தாயாலும் மனைவியாலும் கூட வெறுக்கப்படுவான். எனவே, எத்துணை சிறப்பான அன்புடை நெஞ்சத்தவராயினும், அவ்வன்பு நிலைக்க பொருள் தேவையான ஒன்று என்பது சங்ககால ஆண்மக்களின் குருதியில் பதிந்த கொள்கையாகக் காணப்படுகிறது.

## ஈயாமை இழிவு

அன்றாட வாழ்வியலில் அனைத்து அடிப்படைத் தேவைகளும் பொருளால்தான் ஈடேறும். குடும்பவாழ்வில் அவரவர் இல்லற வாழ்வில் தமது தேவைகளையும் தாண்டி இல்லறக் கடமைகள் எனப் பழந்தமிழர் வகுத்து அதன்படி வாழ்ந்தனர். அதனடிப்படையில் விருந்தோம்பல் தம்மை நாடிவரும் வறியவர், தவமுனிவர்கள், சுற்றத்தார் போன்ற பலருக்கும் இல்லை என்று கூறாது கொடுக்க வேண்டிய கட்டாயமும் அன்றைய இல்வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டது. ஈகை என்பது தமிழர் வாழ்வின் தலையாய அறமாகப்

போற்றப்பட்டது. பாலைக்கலியில் தலைவனின் பிரிவைத் தடுக்க எண்ணிய தோழி, தம்மையும் அறியாது ஈகையின் சிறப்பை எடுத்துக் கூறுகிறாள். இவற்றை,

**“தொலைவாகி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”**
**“இல்லென இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”**
**“இடனின்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”**

**(பாலைக்கலி, பா -1)**

என்ற பாலைக்கலிப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

தம்பொருளைப் பிறருக்கு வழங்கிவிட்டு இரவலராகி நம் இல்லம் நோக்கி வந்து நிற்கும் மேனாள் செல்வந்தனுக்கும் தம்மிடம் எதுவுமே இல்லை. ஏதேனும் தந்துதவுக என இரங்கி நிற்போருக்கும் வேறு போக்கிடம் ஏதுமில்லை எனக்கு இல்லை என்னாது ஏதாவது உதவுக என வந்து நிற்போருக்கும் பொருளில்லை என்று ஒரு இல்லத் தலைவன் கூறுவது மிகப்பெரிய இழிவு என்பது பாலைக்கலியில் பாங்குறப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இல்லறக் கடமையில் ‘ஈதல்’ என்பது மிகவும் அவசியமானது என்பதும் அதைத் தளர்வின்றிச் செய்ய பொருள் மிக இன்றியமையாதது என்பதும் பெறப்படுகிறது.

## பொருளின் தேவை

**“அரிதாய அறனெய்தி அருளியோர்க்கு அளித்தலும்**
**பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்**
**புரிவமர் காதலின் புணர்ச்சியும் தரும் என,**
**பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்ற நம்காதலர்”**

**(பாலைக்கலி,11)**

எனவரும் தோழி கூற்றுப்பாடலில், பொருளின் தேவை சிறப்பாக விளக்கம் பெறுகிறது. அற ஒழுக்கத்தை முழுமையாக ஏற்று நடப்பது என்பது மிகவும் அரிது. அத்தகைய அரிய செயலை மேற்கொண்டவர்கள் தம்மில்லம் தேடி வரும்போது அவர்களுக்குக் கொடுப்பது மிகவும் முக்கியக்கடமை. வாழ்வுக்குப் பெரிய பகை வறுமை. அந்தப் பகையை அடியோடு அழித்து நிம்மதியாக வாழப் பொருள்தானே ஆயுதம். ஆணவத்தால் நமக்குத் தீங்கிழைக்கும் சிலரது செருக்கழிக்க நம்மிடமும் பொருள் வேண்டும். இவற்றையெல்லாம் செய்தால்தானே காதல் வாழ்வு இனிமையாக இருக்கும் எனத தலைவன் தலைவியிடம் கூறிப் பொருள் தேடச் சென்றதாகத் தோழி கூறும் இப்பாடல், பொருளால் மட்டுமே அறச்செயலை அளவின்றிச் செய்யமுடியும் என்பதை வலியுறுத்துவதை உணரலாம்.

## பொருளிலார்க்கு இல்லறம் இனிக்காது

**“பொருளல்லாற் பொருளும் உண்டோ**
**காதலார் எவன்செய்ப, பொருளிலாதார்க்கு?”**

**(பாலைக்கலி, 13)**

இப்பாடலடிகள், பொருளுடையவன் வாழ்வே உண்மையான வாழ்வியற்பொருள் உடையதாக இருக்கும் என்பதையும்,

எத்துணை அன்புடையவர்களாக வாழ்ந்தாலும் பொருளில்லா வாழ்வுக்கு அந்த அன்பு என்னதான் துணைசெய்து விடமுடியும்? பொருளில்லா அன்புகூட, நாள்செல்லச்செல்ல துன்பம் தரும் என்பதையும் நன்கு எடுத்துக் கூறுகின்றன. எனவே, அன்புமிக்க இல்லறமாயினும் அதுமேலும் சிறக்க பொருளென்னும் பொய்யா விளக்கு அவசியம் என்பது பெறப்படுகிறது.

## செம்மைவழியில் பொருளீட்டல்

திறனறிந்து தீதின்றி வந்த பொருள்தான் அறம் செய்யப் பயன்படும். அவ்வறத்தினால் இன்பம் விளையும் என்பது வள்ளுவர் வாக்கு. பழந்தமிழர் நடுவின்றி வந்த பொருளை விரும்பார். நேரிய வழியில் பொருளீட்டல் செல்வத்திற்கு அழகு. அதுவே அறம் எனப் போற்றினர். இதை,

**"நெடுமலை வெஞ்சுரம் போகி, நடுநின்று**
**செய்பொருள் முற்றும் அளவு"**

**(பாலைக்கலி, 23)**

எனப் பாiலைக்கலிப் பாடலடிகள் விளக்குகின்றன. கடுஞ்சுரம் கடந்து துன்பமுழன்றாலும் நடுவு நிலையுடன் கூடிய பொருளையே பழந்தமிழர் விரும்பி ஏற்று வாழ்ந்தனர் என்ற செய்தி புலனாகிறது. தீதிலான் செல்வம் வளரும் என்ற செய்தியும் பாலைக்கலியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கடன்பெறுவோர், தருவோர்

பழஞ்சமுதாயத்தில் இரவலாகப் பொருள் பெற்றுச் செல்லும் செய்திகளே பெரும்பான்மையும் இருப்பதாகப் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். பாலைக்கலி கடன் பெற்ற பொருளில்லாதவர் செய்தியை அழகுற உளவியல் அடிப்படையில் பதிவு செய்துள்ளது. பொருளில்லார் கடன் பெற வரும்போது இனிய முகத்துடன் வந்து பெற்றுச் செல்வதையும் அக்கடன் பெற்ற பொருளைத் திரும்பத் தரும்பொழுது கடுமையாக மாறிய முகத்துடன் வருவதையும் பதிவு செய்துள்ளது. இது தற்காலத்துடன் ஒப்பிட்டு மகிழத்தக்கதாய் உள்ளது. இச்செய்தி,

**"உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும், தாம்**
**கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்**
**பண்டும் இவ்வுலகத்து இயற்கை அது இன்றும்**
**புதுவது அன்றே - புலனுடை மாந்தீர்"**

**(பாலைக்கலி, 21)**

பாலைக்கலியில் கூறப்பட்டிருப்பது சிறப்பு. கடன்பெறும் செய்தி கடன் கொடுத்த செய்தி, கடன்பெற வரும்போது ஒரு முகத்துடனும், அக்கடனைத் திரும்பத்தரும் போது வேறொரு முகத்துடன் வருவதும் பண்டுதொட்டுவரும் பழக்கம் என்று கூறியிருப்பது, மிகத்தொல்பழங்காலத்திலும் பொருளற்ற, பொருளுள்ள நிலைமையைக் கண்முன் நிறுத்துகிறார் ஆசிரியர்.

## அற்றகுளத்தில் அறுநீர்ப் பறவைகள்

செல்வவளம் இருக்கும் வரை ஒட்டி உறவாடியவர்கள் செல்வம் தீர்ந்து வறிய நிலைக்கு வந்தபிறகு அவரை விட்டு நீங்கிவிடுவதும் மனிதகுலம் தோன்றிய போதே உள்ள வழக்கம் போலும், இதைத்தான் ஔவையார் அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவைகள் என்றார். இச்செய்தி, பாலைக்கலியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**"செல்வத்துள் சேர்ந்தவர் வளனுண்டு, மற்றுஅவர்**
**ஒல்கத்து நல்கிலா உணர்விலார் தொடர்பு"**

**(பாலைக்கலி, 24)**

என்ற பாடலடிகள் மனித மனம் பொருள் சார்ந்த வாழ்வில் ஊறிக்கிடந்த செய்தியை தெளிவுறுத்துகிறது. உறவு மேம்பட பொருளுக்கே அன்றும் இன்றும் என்றும் மனிதர்கள் முன்னுரிமை அளிக்கும் செய்தி பெறப்படுகிறது. இவ்வாறு உறவுகள் சிறக்க புறவாழ்வு மேன்மையுற பொருளீட்டுதல் இன்றியமையாத்து என்று எடுத்துரைக்கப்பட்ட சூழலில் அதன் நிலையாமை குறித்தும் சங்கப்புலவர்கள் எடுத்துரைக்கத் தவறவில்லை. மேலும் அகவாழ்வில் செல்வத்தைவிட அன்பான வாழ்வு சிறந்தது என்று கூறுவதையும் காணமுடிகின்றது.

## பொருளின் நிலையாமை உணர்த்துதல்

நிலையற்ற மனிதவாழ்வில் நிலைபெற்று நன்மையும் தீமையும் மாறிமாறித் தரும் செயலை இடைவிடாது செய்துவருவது பொருளெனக்கூறப்படும் செல்வம். அது நிலையில்லாதது, சகடக்கால்போல மாறிமாறி வரும் என்பதெல்லாம் தெரிந்தாலும் அதன் மேலுள்ள ஈர்ப்பு எக்காலத்திலும் மனிதகுலத்திற்குக் குறைவதில்லை என்ற செய்தி சங்கநூல்களின் மூலம் அறியக் கிடைக்கிறது.

யாழிசைக் கேட்பவரை மகிழ்விக்கும். அவ்வியாழின் ஓர் நரம்பு அறுந்துவிட்டால் யாழிசையும் கெடும். அதுபோன்றதே பொருளும். செல்வம் நியைற்றது. அது வந்து சேரும் காலத்து அதனைக் கொண்டவரைப் பெரிதும் மகிழ்விக்கும். அதுபோகும் போதோ அவர் தம்மளவில் துயரடைவதுடன் பிறராலும் இகழச்செய்யும். இவ்வாறு நிலையில்லாது அடிக்கடி கைமாறும் இயல்புடையது பொருள் என்ற பொருளடங்கிய பாலைக்கலிப் பாடலடிகள்,

**"ஏழும் தம்பயன்கெட இடைநின்ற நரம்பு அறூஉம்**
**யாழினும் நிலைஇல்லாப் பொருளையும் நச்சுபவோ?**
**மரீஇத் தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது**
**பிரியுங்கால் பிறர்என்ன, பீடின்றிப் புறம் மாறும்**
**திருவினும் நிலையில்லாப் பொருளை நச்சுபவோ?"**

**(பாலைக்கலி, 7)**

என்ற பாடலடிகள் நிலையில்லாத பொருளை நிலையென எண்ணும் மனிதமனத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## அகவாழ்வில் பொருள்

பொருள் வாழ்விற்கு மிகவும் அவசியம். அதைக்கொண்டு வளவாழ்வு வாழலாம். எனினும், அவற்றால் முடியாத செயல்களும் உண்டு.

அன்புடைய மனைவியைப் பிரிந்து நீ பொருளீட்டச்செல்கிறாய். பல தேசம் கடந்து நீ தேடிவரும் பொருள், உன்னைப் பிரிந்தால் பிரிந்துபோகும் அவளது உயிரை மீட்டுத்தருமோ? எனத்தோழி கேட்கும் பாடலில், பொருளால் எல்லா இன்பத்தையும் அளிக்க முடியாது என்பது பெறப்படுகிறது.

**“மற்றிவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ -**
**முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே”**

**(பாலைக்கலி, 6)**

இல்லறக் கடமை இனிது சிறக்க, பொருள் இன்றியமையாதது ஆயினும் இல்லத்தலைவி இல்லாத பொருளால் யாதுபயன்? என வினவும் தோழியின் வினாவில் தலைவியின் மேலுள்ள அன்பு மேலீட்டால் கூறுகிறாளேயன்றி பொருளின்மீதுள்ள வெறுப்பன்று. பொருளில்லா வாழ்வு சிறக்காதென்பதைப் பெண்டிரும் அறிவர்.

**“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என**
**நமக்கு உரைத்தோரும் தாமே”** **(குறுந்தொகை - 135)**

என்ற குறுந்தொகைப்பாடல் தொழில்புரிந்து பொருளீட்டுவது ஆடவரின் முழுமுதற் கடமை மட்டுமன்று. அது அவரது உயிரனைய கடமை என்பது கூறப்பட்டுள்ளது. அத்தகைய வினையுடை ஆடவர் குலமகளிர்க்கு உயிராவர். இத்தகைய குலமகளிர் தம் கணவர் வினையுடையவராக இருத்தலையே விரும்புவர்.

எனினும், தலைவன் மீது கொண்ட அன்பின் மிகையில் வாழ்வில் கணவன் மனைவி இணைந்து வாழும் அன்புடைய வாழ்வே உண்மைப் பொருள் அழியக்கூடிய பொருள் பொருளாகாது எனக் கூறுவதைப் பல்வேறு அக இலக்கியங்களில் காணமுடிகிறது. அவ்வகையில் அமைந்த பாலைக்கலிப் பாடலும் இதையே வழிமொழிகிறது.

**“இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்**
**வளமை விழைதக்கது உண்டோ? உளநாள்**
**ஒரோஒ கை தம்முன் தழீஇ,ஒரோஒ கை**
**ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை: அரிதுஅரோ**
**சென்ற இளமை தரற்கு”**

**(பாலைக்கலி, 17)**

இப்பாடலடிகள் ஒரு துண்டு ஆடையை உடுப்பவராக வறுமையுற்று வாழ்ந்தாலும், அதனைப்பற்றிக் கவலைப்படாது ஒன்றிக்கலந்து வாழ்பவரின் வாழ்க்கையே சிறந்த இன்ப வாழ்க்கை. இதுவே வாழ்வில் உண்மைப்பொருள் என்று அன்பிற்சிறந்த மகளிரின் மனஉணர்வை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

## முடிவுரை

பொருளை வாழ்வின் பொருள் வாழ்க்கைக்குப் பொருள் என்ற இருவகைகளில் காணலாம். வாழ்வின் பொருளென்பது அகவாழ்வு சார்ந்த்து. வாழ்க்கைக்குப் பொருள் என்பது புறவாழ்வு உணர்த்துவது. பாலைக்கலியில் இவ்விரு பொருள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கணவனும் மனைவியுமான அகவாழ்வில் வறுமையிலும் செம்மை, செல்வம் இல்லையெனினும் இணைந்து வாழும் அன்பு வாழ்க்கையே வாழ்வின் பொருள் என்று எடுத்துரைக்கப்படுகிறது. அவ்வமயம் செல்வத்தை விட அன்பு சிறந்ததாகச் சுட்டப்படுவதைக் காணமுடிகின்றது. மேலும் செல்வம் நிலையில்லாதது என்பதும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் புறவாழ்வியல் என்று வருகையில் அவ்வன்பு சிறக்கவும் உறவுகள் மேம்படவும் இல்லார்க்கு உதவவும் வாழ்வைச் செம்மையுடன் நடத்திச் செல்லவும் செல்வமாகிய பொருளே மிகத் தேவையான ஒன்றாகிறது என்பதை உணர்ந்த சங்க காலச் சமூகச் சூழலைப் பாலைக்கலிப்பாடல்கள் உணர்த்துவதைக் காணமுடிகின்றது. பொருளில்லார்க்கு இவ்வுலகம் மட்டுமில்லை. எவ்வுலகிற்கும் செல்வமாகிய பொருள் தேவை என்பதைப் "பொருளல்லாற் பொருளும் உண்டோ? என்று வினவி வாழ்வின் செம்மைக்கு செல்வமாகிய பொருளே தேவையென்பதைப் பாலைக்கலி பகருவதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

## References

Arumukam Na., (1985) Kaliththokai Oar Aazhvayvu, Pari Nilayam, Chennai,

Pillai Ka., Su., (2012) Thirukkural Parimelalgar Urai, Poompukar Pathippagam, Chennai.

Vengadasami Nattar., (2008) Silappathikaram Moolamum Uraum, Ramaya Pathippakam, Chennai

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License